கரும்பு கிடைப்பதால் குனியமுத்தூரில் ஆலையை நிறுவுவதால் இரண்டு பருவங்களிலும், அதாவது சர்க்கரை ஆண்டு பருவத்திலும் சிறப்புப் பருவத்திலும் கரும்பு கிடைக்கும். ஆனால் காரமடையில் ஒரு பருவத்தில்தான், அதாவது ஜூலை செப்டம்பர் சிறப்புப் பருவத்தில்தான் கரும்பு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

கொடிமுடிப் பகுதியில் கொண்டு வர வேண்டுமென்றால் அதைப் பற்றி பின்னால் பரிசீலிக்கலாம்.

திரு. வி. பழனிவேலு : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் பகுதியில் சர்க்கரை ஆலை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றதா ? இது என்ன ஆயிற்று, எப்போது ஆரம்பிக்கப் பட உள்ளது என்பதை தெரிந்து கொள்ளலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போட வேண்டும்.

* 533 வினா திரு. த. சோணையா : மாண்புமிகு தொழில் மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஒன்றியத்தில் சர்க்கரை ஆலை ஒன்று புதிதாக அமைக்க திட்டம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (ஆ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கை வட்டத்தில் புதிய சர்க்கரை ஆலையொன்று அமைக்கப்படவிருக்கிறது.

Central Staff College.

*624 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether the Government are aware of the proposal of the Central Government to start a Central Staff College for Training high level functionaries of Agricultural Universities during the Fifth Plan ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) வேளாண்மைக் கல்லூரி பற்றிய விவரங்கள் மாநில அரசிடம் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், அதனுடைய வேலை என்ன? இது எங்கு அமைக்கப்படும், அதனுடைய முக்கியமான பணி என்ன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாநில அரசாங்கத்திடம் விவரம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அதுபற்றி கேள்வி கேட்டால் என்ன அர்த்தம் ?

Tube-well Corporation

*625 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether there is any proposal under the consideration of the Government to set up a Tube-well Corporation in the State, and

(*b*) if so, the details there of ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்த டாக்ஸ் போர்சில் சொல்லப்பட்டு இருப்பது 8.7 டி. எம். சி. அதற்கு ஏராளமான—65 லட்சம் கிணறுகள் பிரயோசனப்படும். இப்போது நம் மாநிலத்தில் இராமநாதபுரம், திருநெல்வேலி நீங்கலாக மற்ற மாவட்டங்களையும் சேர்த்தால் 8.7 டி. எம்.சி. இருக்கிறது. கோடிக்கணக்கான கிணறுகளுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. ஏற்கனவே நீர் எல்லாம் பயன் படுத்தி ஆகிவிட்டது. அடி நீர் கொண்டு வந்தால் தான் பிரயோசனம். இதற்கு தனியாக ஒரு வாரியம் வைக்க சர்க்கார் முயற்சி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நில நீர் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்துக்கள் ஏற்கக் கூடியவை. ஆனால் அதற்காக தனியாக கார்பொரேஷன், கம்பெனி அல்லது கழகம் நிறுவுவது முடியாது என்று சொன்னேன். ட்யூப்வெல் துவங்குவதற்கு அதிகப்படியாக பவர் ட்ரில் பெருவதில் அரசு மிகத் தீவிரமாக முயற்சி செய்து இருக்கின்றது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த நில நீரைக் கொண்டு வர வேண்டும் என்பதில் அமைச்சருக்கு ஆர்வம் உண்டு. இப்போது இருக்கின்ற நில நீர் கோட்ட திட்டங்கள் மூலம் குழாய்க்கிணறுகள் போடுவதற்கு போதிய கை போர்செட் பவர் ட்ரில் இல்லை என்று குறைப் பட்டு இருக்கின்றனர். இக்குறையை நீக்க அரசு என்ன முயற்சி எடுதது இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.